கு. முத்துக்குமாரசுவாமி
28.11.84
D-244

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ
கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்

சிவாநுபவசாரம்.

:0:

திருப்பனந்தாட்காசிமடத்துப்

பரமசிவசுவாமிகள்

செய்தது.

இது
வட்டுக்கோட்டைக்
கண்ணலிங்கேசுர ஸ்வாமிகோயில்
தர்மகர்த்தா
க. குருமூர்த்திஐயரால்
வண்ணார்பண்ணைச்
செந்தமிழ்ப்பரிபாலன யந்திரசாலையில்
அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

கலி: ௫௦௯௪.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

சிவானுபவசாரம்.

திருப்பனந்தாட்காசிமடத்துப்

பரமசிவசுவாமிகள்

செய்தது.

இது

வட்டுக்கோட்டைக்

கண்ணலிங்கேசுர ஸ்வாமிகோயில்

தர்மகர்த்தா

க. குருமூர்த்திஐயரால்

வண்ணார்பண்ணைச்

செந்தமிழ்ப்பரிபாலன யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

கலி: ௫0௯௪.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

உ

முகவுரை.

சிவத்தோடு ஆன்மா சைதனியமாகும் இயல்பின் சாரத்தை யுணர்த்துதலின் இந்நூல் சிவானுபவசாரம் என்னும் பெயர்பெற்றது. இந்நூலை இயற்றியவர் திருப்பனந்தாட்காசி மடத்துப் பரமசிவசுவாமிகள் என்பவர். இவர் எடுத்தவேடு படிக்கத்தெரியாதபருவத்தே காசி முதல் இராமேசுரபரியந்தமுள்ள ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளது மடங்களுக்கும் தருமசத்திரங்களுக்கும் அதிபதியும் திருப்பனந்தாட் காசி மடாதிபதியுமாகிய ஸ்ரீமத் காசிவாசி இராமலிங்கசுவாமிகளையடைந்து அவரிடத்தே பொருளுதவியும் அருளுதவியும் பெற்று இலக்கண விலக்கியங்களையும் சமயசாத்திரங்களையும் கற்று வல்லுநராய்க் குரு விசுவாசமுடையவராய்த் துறவறவொழுக்கத்தின ராயினர். பின்பு, இவர் புண்ணிய பூமியாகிய பாரதகண்டத்திற் பிறந்தவர்கள் மண் பெண் பொன் என்பவற்றிலாசை நீத்து வீட்டு நெறியே உயர்ந்ததென்று கருதியுய்யும்பொருட்டுச் "சிவானுபவசாரம்" என்னும்இந்நூலையும் திருப்பனசை மும்மணிக்கோவை, குமரகுருபரசுவாமிகள் தோத்திரப்பாமாலை, காசிவிசுவேசுரரந்தாதி முதலிய நூல்களையும் இயற்றினர்.

இந்நூல் காப்புச்செய்யுளொன்றும் அவையடக்கச்செய்யுளொன்றும் ஒவ்வோரதிகாரங்களும் பப்பத்துச்செய்யுள்கள் கொண்ட இல்வாழ்க்கையிழிவு முதலியபத்து அதிகாரங்களில் நூறுசெய்யுளுமாக நூற்றிரண்டு செய்யுள்கள் கொண்டது. இந்நூலிலுள்ள அதிகாரங்கள் இல்வாழ்க்கையிழிவு, செல்வத்தினிழிவு, யாக்கையின் றன்மை, ஊழ், பதிநிலை, உணர்த்துமுறைமை, பஞ்சாக்கர வியல்பு, சித்தசாதனம், வீட்டியல், அணைந்தோர்தன்மை என்பன. இவற்றால் இல்வாழ்க்கையும் செல்வமும் நிலையாவென்பதும், யாக்கை நீர்க்குமிழி போல் அழியு மியல்பினதென்பதும், ஊழினால் அனுபவிக்கப்படும் நன்மை தீமைகளில் விருப்பு வெறுப்புக் கொள்ளலாகா தென்பதும் சமய சாத்திரங்களையுணர்ந்து பஞ்சாக்கர செபம் முதலிய நற்கிரியைகள் செய்து வீட்டினை யடைதல் வேண்டு மென்பதும் இனிதுணரப்படும். சிந்தையு மொழியுஞ் செல்லாவியல்பிற்றாயவீட்டியலினை மோனை எதுகை முதலிய தொடை நயம்பெற வெண்டளைதட்டு நிற்ப இனிய வெண்பாக்களான் யாத்த இந்நூலாசிரியரது பெருமைசாலவும்வியக்கத்தகுந்தது. இவர் இந்நூலை இயற்றியது இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்னாகும்.

அவையடக்கம்

வெள்ளைக் கவியா விளம்புமிந் நூலுணர்ந்தோர்
பிள்ளைக் கவியென்றே பெட்புறுவார் - வெள்ளைமனத்
தென்போல்வா ரென்னை யிகழ்வதினாலெதுபயன்
தன்போலே யானிருக்கத் தான்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்ஞகம்,
இலங்கை.

உ

கணபதிதுணை.

சிவானுபவசாரம்.

காப்பு

சொல்லாய்ப் பொருளாய்ச் சுருதி முடிவிலுறை
பொல்லா விநாயகர்தாள் போற்றினேற்-கொல்லாவோ
முன்னூலிற் கூறும் முதற்பொருளை யோர்ந்துணர்ந்தே
இந்நூலிற் கூறுவதற் கே.

முதல் அதிகாரம்—இல்வாழ்க்கையிழிவு.

நன்மனைவி யோடு நலமுறவே வாழ்ந்தாலு
மன்னமுத லாந்தரும மாற்றிடினுந் -தன்னதெனு
மெய்ம்மகவைப் பெற்றாலும் விண்ணாட்டி லின்பமன்றிக்
கையுறுமோ முத்திநிலை காண். (க)

மன்றலிலே வந்தாண் மனையாண் மகிழ்ந்தவளோ
டொன்றலிலே வந்தா ருறுபுதல்வர்-பொன்றலிலே
வந்தாரோ கண்டிலையோ வன்மைமட நெஞ்சேயுன்
சிந்தையிலே வைத்துத் தெளி. (உ)

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்ஞகம்,

எடுத்தியம்பு நூலெல்லா மேந்திழையா ராசை
விடுத்துவிட்டான் மற்றிரண்டும்வீயு - மடுத்ததோ
ரானந்த வீடு மணுகுமென வுரைத்தா
னீநந்தக் கொள்வதென்ன நேர். (௩)

ஈச னமக்களித்த விவ்வுடம்பு மேந்திழையா
ராசைகொண்டு பேய்போ லலையவோ —நேசமதாத்
தன்னடியைச் சேருந் தவமியற்ற வோகல்லாக்
கன்மனமே நீயே கழறு. (௪)

எல்லா வினைக்கு மிருப்பிடமா நாரியரைப்
பல்லாருங் காணப் பணங்கொடுத்துப் -புல்லுவதைக்
கற்றறிந்தோ ரெல்லாங் கடியென் றுரைத்தவா
றுற்றறிவா யுன்மனத்தி னுள். (௫)

கணமதனில் வீயவருங் காரிகையார் மோகங்
குணமதெனக் கொண்டுழலுன் கொள்கை-பிணமனமே
வேதாவுங் கூற்றுவனும் வேலைசெய வோதெரிந்த
மேதா வுனைப்போலார் விள். (௬)

தோனிறம்பொன் முத்துநகை தொண்டையிதழ் மென்
கால்கை முகமென்னக் கன்னியரை- மாலறிவாற் [கமலங்
பன்னிப் புகழ்வதனாற் பாக்கியம்பெற் றுய்கொல்லோ
புன்மனமே நீயே புகல். (௭)

கல்லே புணையாக் கடல்கடக்க வப்பரல்லாற்
றெல்லுலகின் மாந்தர் துணிவரோ-வில்வாழ்வி
னின்று சிவனருளை நேரடைந்த ஞானியர்போற்
சென்றிடவல் லரோநீ செப்பு. (௮)

எல்லாமும் வல்லபிரா னீரிருவ ருக்குணர்த்தக்
கல்லா லடியுற்ற காலத்திற் -கல்லீன்ற
மாதெங்கே முன்பிறந்த மைந்தனெங்கே தம்பியெங்கே
பேதைமட நெஞ்சே நீ பேசு. (௯)

நால்வகையான் மேலோர் நவிலாச் சிரமத்தின்
மேல்வகையுங் கீழும் விளங்கவே - சால்புடைய
மெய்யறிஞர் நூலால் விளம்பினராற் றங்களுக்கோ
வுய்யமன மேநீ யுணர். (௧௦

௨ ம் அதி.—செல்வத்தினிழிவு.

விண்ணினுறு செல்வம் விரும்பா ரருளுடையார்
மண்ணினுறு செல்வ மதிப்பரோ - நுண்ணறிவில்
மாந்தர் சிலர்மதிப்ப வாழ்பொருளா லேதுபயன்
சாம்பொழுது கைதருமோ சாற்று. (௧)

ஆணவமா மோர்புருட னுரோக ணித்துவரச்
சேணக்குதிரை யெனத்திகழு - மாணிழையார்
ஆசைக் கயிறுபற்ற வாதார மாம்பொருளி
னேசமறப் பாசமுறுய் நீ. (௨)

தன்னைக் கெடுப்பதுவுந் தக்கார்ப் பகைப்பதுவு
முன்னைத் திருவருளை மூடுவது -முன்னைவினை
தன்னைப் பெருக்குவதுஞ் சார்பிறவி யீட்டுவதும்
பொன்னையன்றி யுண்டோ புகல். (௩)

தாய்க்கொலையு முற்ற தமர்க்கொலையுந் தான்பெற்ற
சேய்க்கொலையுஞ் செய்யச்செலுத்துமே-வாய்த்தநல்லார்
கற்பழிக்கு மேநரகக் காணிதருமே செல்வ
மற்பமன மேநீ யறி. (ச)

சூதுசெய்ய மாதர் சுரதவி தங்கள்செய்ய
வாதுசெய்ய வீணே மறஞ்செய்யப்-போதமிலார்
கோட்டிசெய்ய வேண்டுங் கொடுமைசெய வுற்றதுணை
நாட்டும் பொருண்மனமே நாடு. (ரு)

தன்னி லிருந்து தனதறிவைக் கீழ்ப்படுத்திப்
பின்னும் பகையைப் பெருக்கலான்-முன்னின்று
பேசும் பகையிற் பெரிதுசெல்வ மாதலினல்
வீசடைவாய் பேரின்ப வீடு. (சு)

தேடிவைக்கச் சொல்லுஞ் சிலரைச் சிலரைவெகு
மோடிவைக்கத் தான்வந்து முன்னிற்கும்-பாடிநின்று
கைகுவிக்க வேசிலரைக் காட்டும் பெருண்மாயம்
பொய்மதியார் மெய்மதியார் போ. (எ)

வாயிலா தார்சிலரை வைய்யவெண்ணிற் கூடிடுமோ
தீமைவறி யோன்சிலரைச் செய்திடினே-யேயாவாம்
செல்வந் தனையுடையான் செய்கரும முற்றிவைக்குஞ்
சொல்வதனைக் கண்டறிந்து சூழ். (அ)

சேற்றிற்பு குந்துசென்றுஞ் சேறடையாமென்பூப்போற்
றேற்றுசெல்வத் துள்ளிருந்துந் தோயாரே - போற்றி
தேவர் துதிக்கச் சிவபெருமான் சேவடிக்கீழ்ப் [யெனத்
போவர்மன மேயறிந்து போற்று. (கூ)

ஒருசாண் வயிறுநமக் குண்டதனை யோம்பப்
பெருமாயஞ் செய்து பெறுவானே - னருகாது
குன்றுபோற் சேர்த்துக் குவித்துவைப்பா னேன்பொரு
கன்றுமன மேகருதிக் காண். [ளைக்

---

௩ ம் அதி —யாக்கையின்றன்மை

எண்பத்து நான்கிலக்க யோனிதொறு மெய்துமுயிர்
கண்பெற்ற நெற்றிக் கடவுளாற்-பண்புற்ற
மானுட யாக்கை வரத்தவமுன் செய்தநெஞ்சே
கோனடிசேர் நல்வழிகைக் கொள். (௧)

தேவர்க் கரியான் றிருவருளைச்சேருதற்கா
மேவத் திருவுருவம் வேண்டியநீ-தாவுமுன்னே
செல்வழிக்குத் தக்க திறமறியா தென்கொலோ
கல்வழிபோய் வீழ்ந்தாய் கடல். (௨)

வேண்டுருவ யெல்லாம் விரும்பியாங் கெய்தொருவன்
ஆண்டருளக் கொள்கோல மல்லவோ-பூண்டுநின்று
யோதி யுணரு முனக்கியைந்த காரணத்தை
யேதென் றுரைப்பே னினி (௩)

நூல்பயில மேலோர் நுவலுறுதி கேட்டுணர
வாலறிவான் ஞான வகைதெரிய-மேலாங்
கதியடைய விவ்வுடம்பு காரணமா நெஞ்சே
திதியறுமுன் செல்வழியைத் தேர். (௪)

வாள்பெற்ருன் றன்பகையை யாற்றுவா னன்றித்தன்
ருேள்பற்றிக் கொய்யத் துணிவனோ-கேளையோ
பாசப் பகைதணிப்பப் பற்றுமுட லாற்றன்னை
நாசமுறச் செய்வதென்னே நாடு. (ரு)

கருவி லழியுங் கழிந்தழியு மன்றித்
தருணவயதினிலுஞ் சாமே-திரைமருவு
மூப்பி லழியு முறையறிதி யேன்மனமே
காப்புதவு ஞான முறுங் காண், (சு)

மண்ணி லரசாகி மாண்டார்க் களவுளவோ
விண்ணி லரசாகி வீய்ந்தோரை-யெண்ணியெவர்
சாற்றுவார் நின்வாணு டாவாதே லோவாதே
போற்றுவா யிந்தப் புரம். (எ)

இறக்குந் தொழிலை முன்னே யெய்தியன்ருே பின்னும்
பிறக்குந் தொழிலையுநீ பெற்ருய்-கறுத்துவருங்
கூற்றுவனுக் கோர்வசனங் கூறப் படித்தனையேற்
சாற்றுந் துதியுனக்கே தான். (அ)

நான்கு தொழிலுனக்கு நாடாதே வந்துவிடுங்
கோன்புரியு மோர்தொழிலுங் கொள்வாயேற் - றேன்பெ
வானத் தமரர்பெறு வாழ்வுகக்கி விட்டவனந் [றுதார்
தானெத்துக் காணுதோ சாற்று. (கூ)

நித்தமா யொன்றாய் நிரதிசயா னந்தமாய்ச்
சுத்தமாய் ஞானச் சுகமாகிச்-சத்தியமாய்
வீடிருக்க விவ்வுடலை வீணை வளர்த்தழிவாய்
காடிருக்கென் றேமனமே காண். (கo)

சம் அதி.—ஊழ்.

சீவனு நீமுன்னஞ் செய்கருமத் துக்கிசையப்
பாவமும் புண்ணியமும் பாரின்கண் - மேவி
யளிக்கும் பயனைமறந் தந்தோதுன் புற்றுங்
களித்தும் பொழுதொழித்தாய் காண். (க)

எந்த வுலகி லெவர்தா நினைத்தபடி
சிந்தையுடன் பெற்ற திறமுடையார் - புந்தியிலாய்
கன்மமிலான் கன்மக் கயிற்று லியக்குவதைச்
சென்மமிலார் சொன்னார் தெளி. (உ)

கர்த்தன் கருமானு சாரமாக் காண்பானென்
னர்த்தந் தெரிந்துணர்வா யாகினீ - சித்தமே
வாழ்வை மதித்தும் வறுமை தனையிகழ்ந்து
மூழைமறப் பாயோ வுரை. (ங)

இரவும் பகலுமென வின்பதுன்ப மாறி
விரவும்படி யறிந்து மேவாய் - திருவுடையார்
துன்ப முழப்பதென்னோ சூழ்வறுமை யுற்றோரு
மின்ப முழப்பதென்னோ வேது. (ச)

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

மித்துருவாய் வந்துனக்கு வேண்டியதை யீவதுவுஞ்
சத்துருவாய் வந்தொருங்கே தாழ்த்துவது - மெத்தியுன
துள்ளத்தை வேறு யொதுக்குவது மூழென்றே
கொள்ளப் படாதோ குறி. (ரு)

ஓர்வீட்டி லோர்வயிற்றி லுற்றுப் பிறந்தபல
பேர்போகம் வேறுய்ப் பிரிந்ததே - தேர்வாய்முன்
செய்தவினை யல்லாலிச் செய்கைசெய வல்லார்யார்
எய்த வுரைப்பா யினி (சு)

நீநினைத்த வோர்பொருளை நேரடைவா யோவன்றி
நீநினையா முன்வந்தா னீக்குவையோ - வானி
லிருப்பார்க் கரியா னிருவினைக்கும் போகம்
விருப்பாய்க் கொடுப்பனென்றான் மேல் (எ)

எவ்வுலகி லெத்தனுவி லெப்போக மெவ்வினைக்கோ
அவ்வுலகி லத்தனுவி லப்போகங் - கவ்விவருஞ்
சொன்னே னிதனைச் சுருதி யெனவுணர்ந்து
பின்னையம் விட்டுப் பிரி. (அ)

கேவலத்தின் மூழ்கிக் கிடந்தவனை யிச்சகல
மேவத் தருவினையான் மேலாகுங் - கோவின்
பதமலர்சேர் சுத்தமுநீ பற்றுவையென் றுன்னி
யிதமுறச்சொன் னேன்சற் றிசை. (கூ)

வேண்டிமு யற்சிசெய்து வீறழிந்தோ ரெத்தனைபேர்
தாண்டி வரிலதுவுஞ் சாதகமாம - வேண்டி
நகுட னெனவொருவ னுகவுல குற்றும்
மகுடம் பெறுதொழிந்தான் மாண்டு. (க0)

௫ ம் அதி — பதிநிலை.

ஐம்பூ தமுமுயிரு மாதித் தனுமதியும்
வெம்பூத நாதன் விரும்புருவேல் - வம்போதிச்
சுட்டி யுணர்வதெவன் றாயநெஞ்சே நாமவனை
விட்டுப் பிரிவதெவன் வேறு. (௧)

காதின்றிக் கேட்பவனுங் கையின்றி யீபவனு
மோதுநா வின்றி யுரைப்பவனும் - போதனைய
காலின்றிச் செல்பவனுங் கண்ணுதலா னென்றுணர்தி
மாலின் றியுன்மனத்தே வைத்து. (௨)

நாமறிய நம்மறிவி னுள்ளிருக்கு நாயகனை
நாமறிய வேண்டி னணுகுமோ - வாமென்னிற்
கண்ணுந் தனையறியுங் காட்டுங் காணமுமே
நண்ணுந் தனையறியு நாடு. (௩)

அச்செழுத்தின் முன்னு மகாரத் தியக்கமென
அச்சியக்க வுன்னை யசைப்பவனை - நிச்சயமாத்
தேர்ந்தறிய வேண்டிலவன் சீரருளே காரணமா
மோர்ந்தறிவா யுன்மனத்தி னுள். (௪)

நாலருவாய் நாலுருவாய் நண்ணிரண்டு மோருருவாக்
கோலிவரு வானறியாக் கொள்கையான் - சால
அவனருளாற் கண்டுதொழ லாமன்றி வேறே
எவன்மருளாற் கண்டுகொள வேது. (௫)

முற்றறிவன் முத்தன் முதல்வன் முக் கண்ணனீ
சிற்றறிவன் பெத்தன் சிறப்படிமை—மற்றதனாற்

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி :: சுன்னுகம்,
இலங்கை.

றெண்டுசெய னின்கடமை சோதித் திருவுருவன்
கண்டருள றன்கடமை காண். (சு)

கன்மஞ் சடமொருவன் காட்டத் தெரிபவன்யாஞ்
சென்மம் பலவகையாஞ் சீர் தூக்கிப் - புன்மனமே
கூட்டிப் பிரித்துநிதங் கூத்தாட்டு வானரனே
கோட்டமுள தேலறியக் கூறு. (எ)

எங்கு முறைவா னெவர்க்கு மறியவொண்ணான்
மங்கை பிரியா வடிவினன் - றங்கமுடிக்
கங்கையான் மற்றுமொரு கங்கையான் சேவடியைச்
சங்கையறக் கொண்மனத்தே தான். (அ)

ஆலயத்தின் மேவு மருட்குறியுந் தன்னடியார்
சீலத் திருவுருவுஞ் சேரிடமாம் - பாலாவின்
றேகமேலா முற்றுஞ் செருத்தல் சுரப்பிடமா
மேகன் செயலையறிந் தெண். (கூ)

வேதன் படைப்பதுவும் விண்டு புரப்பதுவு
நாதன் கருணைபதி நன்மையா - மீதல்லாற்
றன்றலையே னுக்கான் றருவிடமே னுண்ணனீ
யின்றெனக்குச் சற்றே யிசை. (க0)

கூம் அதி.— உணர்த்துமுறைமை.

சத்தினி பாதந் தலைப்பட் டவர்விழிக்கு
மித்தையுறு நம்விழிக்கு மேவவே - முத்திதர
மானிடத்த னுய்த்திகழ்வன் வள்ளல் கருணையினு
லூனெடுத்த நெஞ்சே யுணர். (க)

வாதவூர் வந்த வரதமணி வாக்கன்றற்
போதம் பறிகொடுத்த புண்ணியன் - சீதக்
குருந்தடியிற் கண்டவருட் கோமானை நெஞ்சே
மருந்துருவா யுன்மனத்தே வை. (உ)

ஊரில்லா னூர்பெறவு மோதிப் பரவுதற்கோர்
பேரில்லான் பேர்பெறவும் பெற்றுயே - சீரில்லா
ஆக்கையிலா னுக்கை யடைந்துகுரு வாய்வரநீ
பாக்கியஞ்செய் தாயறிந்து பற்று. (௩)

பெண்கொடுக்கு மாமனுற்றுற் பேராசை யோடுசென்று
கண்கொடுத்துவாய்புதைத்துக்காண்பாயே - மண்கொடு
வாழ்வைவிட்டுப் பேரின்ப வாழ்வுதருந் தேசிகனைத்[த்த
தாழ்வையெனி னேதுகுறை சாற்று. (ச)

நின்பெருமை நீயறிய நீணிலத்தி னின்போலத்
தன்பெருமைதானறியான் சார்ந்தானே - யன்புருவாய்க்
கண்டு துதித்துக் கருணைத் திருவமுதை
யுண்டுதினைத் திங்கே யுறை. (ரு)

உன்னைத்தா னுக்கி யுருவழிக்குந் தேசிகற்குப் [னக்
பொன்னைப் பொறையுடலைப் போமுயிரைத் - தன்னதெ

கொள்ளாம லீயுங் கொடையுங் கொடையாமோ
கள்ளமன மேகருதிக் காண். (சா)

கண்ணைமறைத் தானுதலிற் காளமறைத் தான்மிடற்றிற்
பெண்ணைமறைத் தானிடத்திற் பேராளன்- மண்ணையுன்
பற்றுமுனைப் பற்றுவிடப் பற்றுருவிற்குற்றதெனப்[னிப்
பற்றுமன முற்றிதனைப் பார். (எ)

வாக்காற் றிருக்கரத்தால் வண்ணத் திருவடியா
ளேக்கான் மனத்தா னுவன்முத்தி-யாக்கவந்த
தேசிகற்குக் கைமாறு செய்வதுநா மெப்போது
நேசமதாத் தொண்டுசெய னேர். (அ)

ஆசை யறுப்பா னதன்பின் றிருவடியி
னேசமுறு விப்பா னினைதியேற்—காசமிலா
நேத்திரம்போற் காணவெளி நிற்பா னிதுவன்றோ
தோத்திரம்பெற் றான்செய் தொழில். (கூ)

நூலுணரு நால்வர் நுவலுறுதி கண்டுணர
ஆலடியி லுற்றா னருட்கோமா-னேல
இருவினையு மொன்றாக வெண்ணுமனத் தார்முன்
குருவுருவாய் வருவதவன் கோள். (க0)

எம் அதி.—பஞ்சாக்கரவியல்பு.

ஈசனுற்ற வானவரி லேற்றமாந் தன்மையெனப்
பேசுமனு விற்சிறந்த பெற்றியது-தேசுபெற

அஞ்செழுத் துமைம்பொருளா யாரு மதுநீமனமே
நெஞ்சமுழுத்திக் கொள்வதுவே நேர். (க)

வேதத்து மாகமத்து மேலாய் விளங்குவது
போதத்தி னுள்ளிருக்கும் பொற்பினது-வாதத்துக்
கெட்டாத நாத னிருப்பதுவே யஞ்செழுத்தே
கிட்டாது சொல்வதனைக் கேள். (உ)

ஈசனரு ளுமறைமுன் னேய்பாச மிம்முறையே
வோசையெழுத் தைந்தி னுறுபொருளா-மாசைவைத்து
மானதமா கச்செபிக்க வல்லையெனின் வாழ்வுறுவா
யூனதம்விட் டென்றே யுணர். (ங)

சிம்முதலா வோதுவதே சிவென்று மாதலினல்
நம்முதலா வோதுவதை நாடாதே-யைம்முதலின்
மூன்றுநிற்பி ரண்டழிவு முத்தியினிற் சத்தியமே
தோன்றவுணா ரூன்றவுரைத் தோம். (ச)

முன்னெழுத்துப் பானு முதல்வி யெழுத்தொளியாம்
பின்னெழுத் துக்கண்ணுப் பிறங்குமே-தன்னையுன்னை
மூடுமெழுத் துத்தீப மூலையெழுத் தேயிருளா
நாடியறி வாய்மனமே நன்கு. (ரு)

அஞ்செழுத்தின் முப்பொருளுண் டாதிரண்டும்
பின்னடுவுந், தஞ்சமுளவோர் பொருளாஞ் சாரிரண்டு-
நெஞ்சேகே, ளாருயிருஞ் சேர்மலமு மாமென் றனைத்
தையும்விட், டோயிருக்கு மின்பமுனக் குண்டு. (சு)

ஒருதலைமா ணிக்க முருவேற்றி னுற்பி
னிருதலைமா ணிக்கமுனக் கெய்துங்-கருதலைநீ

முன்பின்ன ருண்மூட முத்தியிடத் திற்றுயில
வென்முன் றவமியற்ற லேவது (எ)

தலைவனருள் பின்னுந் தாக்கிநடு நின்றே
யலையு முனைத்துணையா யாளக்- கலைமுழுதுங்
கற்றாலு முற்றிடுமோ காரணமா மீதுகுரு
சொற்றா லுணர்வதுநீ சூழ். (அ)

நீக்கு மெழுத்திரண்டு நீங்கா வகையிறுகச்
சேர்க்கு மெழுத்திரண்டு சீராக-நோக்கியருட்
டேசிகனே சாற்றத் தெளிவதல்லான் மற்றொருவ
ராசைகொண்டு சொல்வதல வாய். (கூ)

இரண்டெழுத்தை நீக்கு மியல்புரைக்கி னெஞ்சே
திரண்டுவரு துன்பவலை தீர்க்க-விரண்டெழுத்தைச்
சேர்க்குமது வேதென்னிற் சேரருளான் மேற்சிவனைப்
பார்க்குமது வென்றுணர்பண் பாய். (க0)

அம் அதி.—சித்தசாதனம்.

ஆசைவைத்துத் தானே யலையுங் கருமிகளை
நேசமுற்றா லின்பசுக நேருவையோ-பாசமிலா
முத்தன் பதமலரின் மொய்த்தசிவ ஞானிகளை
நித்தமுநீ கண்டிறைஞ்சி நில். (க)

கூடுமிடத் திற்பலபேர் கூடுவையே னீமுந்த
ஆடுமுறை யைத்தணிப்பா யாங்கதற்பின்-கூடுமவர்

பேசுமொழி யைச்செவியிற் பெற்றுயேன் மற்றோர்க்கு
நேசமுறி னும்மொழிய னீ. (உ)

பொய்யை யொழிக்கவந்த புந்தியினுற் காரணப்பேர்
மெய்கண்ட நாதனென மேவினு-னுய்யச்
சிவஞான போதமெனச் செப்பியநூ னெஞ்சே
பவஞான நீக்குமதைப் பார். (ங)

மேவுமரு ணந்தி விளம்புசிவ ஞானசித்திப்
பாவிலொன்று கற்றுலும் பாக்கியமே-தாவலிலா
மெய்யறிய வேறுமொரு மெய்ந்நூலுண் டோவுணர்ந்த
தெய்வமவ னுய்யும்வகை தேர். (ச)

ஈசன் கணத்திலொன்று வெய்தத் தவம்புரிந்த
நேசக் குலத்தில்வந்த நேர்மையினுன்-பேசுஞ்
சிவப்பிரகா சப்பெயராச் செப்பியநூ றன்னைப்
பவப்பிரகா சம்மொழியப் பார். (ரு)

துன்பமாக் காட்டித் துயருழப்ப தும்மனமே
யின்பமாக் காட்டியிறு மாப்பதுவும்-வன்பான
தொல்லைப் படுசென்மச் சூழ்புணரி மூழ்க்குவதும்
வெல்லப்ப டாதறிந்து மேவு. (சு)

வாயுவைநீ தட்ப மனநிற்கு மற்றதனுற்
பாயும் பொறியும் படியுமே-யோய்வதனு
னிவ்வுலகம் போமதனு லீசனரு ளுன்னைவந்து
கவ்வுமிதை நீகருதிக் காண். (எ)

மிண்டிச் செலுமாவை மீட்கவென்றுற் பாகருமே
கொண்டகலி னம்விசித்துக் கொள்வாரே-கண்டதிலே

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னுகம்,
இலங்கை.

போடுமன தைத்தடுப்ப வோடும்வளி யைத்தடுத்தாற்
பாடுபெறும் வீடுமுறும் பார். (அ)

விண்மறையக் கண்மறைப்பர் வீறுதருங் காரியமா
மண்மறைய வெண்ணை மறைப்பாயே- நுண்மனமே
யுன்னாதே யொன்றையுமுன் னோதாதே வாய்பதறித்
துன்னாதே சென்மமுனைச் சூழ். (கூ)

நித்திரையை யின்பமென நீநினைத்த காரணந்தான்
றத்துமன மிந்திரியஞ் சாராமை-யித்தையுன
தெண்ணத்தா னோக்கி னிருவினைக ளேறிடுமோ
நண்ணத்தா னுண்டோ கவில். (கo)

கூம் அதி.—வீட்டியல்.

ஆனந்த மாகி யழியா நிலைமையதாய்த்
தானந்த மில்லான் றன்மையென - மோனந்தந்
தன்னில் விளைவதுவாய்த் தம்பிரா னின்னருளாய்
மன்னுமறி பேரின்ப வாழ்வு. (க)

சாயுச் சியமொழியச் சாரூ முத்தி யெல்லாமு
மீபச் சுமைநீக்கி யின்பமாய்ப் - பாயவைத்த [ட்டு
பொற்சுமையைக் கொள்ளுவார் புந்தியெனத் தள்ளிவி
நிற்குமது மேலா நெறி. (உ)

பொன்னைக் கொடுத்துப் புகழ்வாங்கு வாரிதனை
யுன்னு மறமென் றுரைப்பதெவன் - றன்னைக்

கொடுத்தும் பிறிதொன்றுங் கொள்ளாம லிற்ப
தடுத்ததொரு வீட்டினுக்கே யாம். (௩)

இன்றிருந்து நாளை யிறக்கும் பொருளையெவர்
துன்றும் பொருளென்னச் சொல்லுவா - ரென்றுமொன்
நிற்கும் பொருள்வீடு நீயறிதி சத்தியமே [றாய்
சுற்றும் பொருளுமது காண். (௪)

துன்பத்தை யின்பமெனச் சொல்லுவா ரிவ்வுலகோ
ரின்பத்தைச் சற்றே யியம்பக்கே - டுன்பத்தை
நீக்கிச் சிவானந்த நீர்படிந்து தன்மனமுந்
தேக்கி யிருப்பது நீதேர். (௫)

சாந்த மிரும்பைக் கவருந் தகைமையெனப்
போந்தவருளுன்னைப் புணர்ந்தீர்த்துத் - தேய்ந்துவா
அப்பணைந்த வுப்பேபோ லாருங் கனிரசம்போ
லாய்ப்பதுவே பேரின்ப முண். (௬)

நீயடங்கத் தான்விரியு நீவிரியத் தானடங்கும்
போயறிய வல்லார்ப் புகலுவாய் - தாயதிரை
வாரிபுகு யாறதுபின் வந்துலகோர் தாமுணர்ந்து
தேரவகை யுண்டோ தெளி. (௭)

காறலையுந் தாடலையுங் காட்டும் புணர்ச்சிவழி
தேறலைகொண் முத்திபினிச் சீராமே - வேறலைநீ [ந்து
வீடிருக்குந் தன்மையையுன் மெய்ப்போதத் தாற்றெளி
கூடினார்வா யேதறிந்து கொள். (௮)

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

முத்தி பலவா மொழிவர் சமயிசடா
மித்தை யெனத்தள்ளிவிடு மேவாதே - சத்தியமே
கூறும் பெரியவர்தாள் கொண்டுரைத்த வீடுணர்ந்து
தேறுபல வாய்நினையா தே. (கூ)

வீறுகப் பாவையர்தோண் மேவுவதே முத்தியென்பார்
வேறாக முத்திசொன்னான் மேவாரே - பேறாக
முன்னோன் றிருவடிசேர் முத்தியுரைத் தேனிதனைத்
தன்னேரி லாததெனச் சார். (க0)

[illegible]ம் அதி.— அணைந்தோர் தன்மை

கண்ணிருந்துங் காணாரே காதிருந்துங் கேளாரே
யெண்ணிருந்து மெண்ணாரே யீதிருப்பின் - மண்ணின்றி
யாடுந் திகிரியென வாடுமன்றி நின்போல
வாடுமெனக் கொள்ளாதே யாய். (க)

மித்துருவெ லாமவர்க்குச் சத்துருவே தன்மெய்யுஞ்
சத்துருவா மென்னிலென்னே சாற்றுவது - மத்தியிலே
போகாத வின்பமுற்றோர் போகிக் கணத்தில்வருந்
தேகாதி கொள்ளார் தெளி. (உ)

காமுகர்க்குத் தோற்றுமங்கக் கன்னியெனக் கண்
டவெலாந், தாமவனுக் காணுமொரு தன்மையினார்-போ
மிதனைக், காரணமா யுள்ளதெனக் கண்டிருப்பதல்லாது
பூரணமாக் கொள்ளார்நீ போற்று. (ந)

ஈசன் புரப்புழிமற்றீ றுசெய்வார் யாரேனும்
நாச மவன் புரியி னன்களிப்பார்-பேசிலெவர்
என்னுந் துணிவுடையார்க் கேதுகுறை யுற்றாலுந்
தன்னிலைமை குன்றாரே தான். (௪)

சத்தமெலா மொன்றாந் தரமறியுந் தன்மையினார்
அத்தமெலா மொன்றா யறிதலாற் - சத்தையுன்னிக்
கண்டிருப்ப தல்லாது காரியமா மிவ்வுலகைக்
கொண்டிருப்ப தில்லைக் குறி.

பாலருக்குக் காமசுகம் பற்றுமோ மற்றதுபோற்
சிலருக்கு மிவ்விடயஞ்சேராதே - மேலருக்குத்
தந்தையென வந்த தலைவன் றிருவடியிற்
சிந்தையிலார் சொல்வதெனத்தேர். (௬)

தூங்குவதுந் தூக்கமல சும்மா விருந்தவர்க
ளேங்குவது மேக்கமல வேதென்னிற் - பாங்குபெறத்
தன்னை மறப்பதுவுந் தம்பிரா னின்னருளை
யுன்னிக் கசிவதுமென் றோர். (௭)

சாக்கிரமுஞ் சொப்பனமாஞ் சார்சுழுத்தியுமறியுஞ்
சாக்கிரமாய் நிற்குமொரு தன்மையினார்-பாக்கியத்தைக்
கூறவா யில்லைக் குறித்துணர்ந்து கொள்ளவென்றாற்
றேறமன மில்லைத் தெளி. (௮)

ஆறாறு நீக்கி யதன்மேற் சிவானந்தம்
பேறாக வுண்டுறையும் பெற்றியார் - வேறாகக்
கொள்ளப் பொருளுளவோ கொள்ளுமதை நம்வாயான்
விள்ளப் படுமோ விள். (௯)

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

ஆட்டிவிட்ட பம்பரம்போ லாடுவாய் நீயவரு
மாட்டமிலாப் பம்பரம்போ லாவாயே - வாட்டமிலாப்
பேராணைத் தக்கடலில் வீழும் பெருமையருக்
கோராணைத் தப்பிலையென் றோர். (௰)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.